Registered as a Newspaper

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு ஆனி மீ 18 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 5 (02 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 186

★ குடாநாட்டில்

# 3வது ராணுவத் தாக்குதல் நடக்க இடமில்லையாம்

## இந்திய பிரதிநிதி குப்தா நம்பிக்கை தெரிவிக்கிறார்

— அலுவலகச் செய்தியாளர்; கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணக் குடாநாட்டில், ஸ்ரீலங்கா இராணுவம் தனது "ஒப்பறேஷன் லிபறேஷன்" 3 ஆம் கட்டத் தாக்குதலை நடத்தும் என நாம் நம்பவில்லை. அதற்கான சாத்தியம் உருவாக மாட்டாது.

இவ்வாறு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக பாதுகாப்புத் துறை அதிகாரியான கப்டன் குப்தா நேற்றுப் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இந்திய நிவாரணக் கப்பல்கள் கடந்த வியாழக்கிழமை முதன்முறையாகக் காங்கேசன் துறை வந்தபோது, இங்கு வருகை தந்திருந்த திரு. குப்தா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்பியிருந்தார்.

அங்கிருந்து இன்று அவர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகள் தமது "ஒப்பறேஷன் லிபறேஷன்" 3 ஆவது கட்டத் தாக்குதலை நடத்த முஸ்தீபு நடத்தி வருவதாக வெளிவரும் தகவல்களைச் சுட்டிக் காட்டி அப்படி ஒரு கட்டத்தில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### பருக்கா - 2 காத்து நிற்கிறது

சென்னை, ஜூலை 1

'பருக்கா-2' கப்பலில் இருந்து சனி, ஞாயிற்றுக்கிழமை அளவில் தான் உணவுப்பொருள்கள் இறக்கப்பட அனுமதிக்கப்படும்.

இப்படி சென்னையில் இந்திய உணவுக் காப்பரேஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்னும் அக்கப்பல் காங்கேசன் துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதிக்கப்படவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-எ)

## ஸ்ரீலங்கா செஞ்சிலுவை தலைவர் யாழ் வரலாம்

ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் பந்துல அபயசேகர எந்நேரமும் யாழ்ப்பாணம் வரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

சங்கத்தின் பிரதிநிதியான சின்னென் வயிற்றுக் கோளாறு காரணமாக நேற்று கொழும்பு திரும்பினார்.

மீண்டும் இவருடன் செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடமராட்சியில் சேதமடைந்த பகுதிகளை இவர்கள் பார்வையிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## வீடுகளைப் பார்வையிட சென்றோர் அகப்பட்ட பொருள்களுடன் ஓட்டம்

மாவிட்டபுரம், விமன்காமம் பகுதிகளுக்கு வீடுகளைப் பார்வையிட்டு அத்தியாவசியப்பொருள்களை எடுத்துவரச்சென்ற பொதுமக்கள் [illegible]திடீர்துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து அகப்பட்ட பொருள்களுடன் ஓட்டம் பிடித்தனர்.

நேற்று நண்பகல் இச்சம்பவம் நடந்தது.

மாவிட்டபுரம், விமன்

(4ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



ஓம், ஓம் ஆரையும் அலுகோசுகளைத் தேர்தலுக்கு நிறுத்தினால் வடக்குக் கிழக்கிலே குப்பையைக் கிளறலாம் எண்டது அவைக்கு நல்லா விளங்கும் .....

### ஜே. ஆரை டிக்ஸிற் சந்தித்தார்

கொழும்பு, ஜூலை 2

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று மாலை ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இனப்பிரச்சினை தொடர்பான தற்போதைய நிலைகுறித்து இந்தியா கொண்டுள்ள மதிப்பீட்டைத் திரு. டிக்ஸிற், ஜனாதிபதிக்கு விவரித்தார்.

பிரதமர் ராஜீவ்காந்தியின் கடிதம் ஒன்றையும் ஜனாதிபதியிடம் திரு. டிக்ஸிற் கையளித்தார்.



"வடமராட்சியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலின்போது எனது சகோதரனை இழந்தேன். மற்றொரு சகோதரன் தற்போது இராணுவ முகாமில். இந்த நிலையில் எமக்கு வாழ வழியில்லை. எம்மைக் கூட்டிச் செல்லுங்கள்! அல்லது எமக்கு நிரந்தர பாதுகாப்பு வழங்குங்கள்!!

—கடந்த திங்கட்கிழமை வதிரி பரமானந்தா ஆச்சிரமத்துக்கு விஜயம் செய்த இந்திய செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதிகளிடம் அங்கு தங்கியிருந்த இளம் பெண் ஒருத்தி இவ்வாறு முறையீடு செய்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: ஜெயம்)

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து

## ஈழத்தமிழ் மாணவர்கள் நேற்று நடத்திய பேரணி

யாழ்ப்பாணம், ஜூலை 2

ஈழத் தமிழ் மாணவர், ஆசிரியர்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்து யாழ் மாவட்ட பாடசாலை மாணவர் முன்னணியினர் நேற்று நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

★ கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும் —

★ பாடசாலைகளிலுள்ள இராணுவ முகாம்கள் உடன் அகற்றப்பட

(4ஆம் பக்கம் பார்க்க)

இயன்றளவு தொகுதிகளில்

## வடக்கு, கிழக்கில் போட்டியிடுவதென ஐ. தே. க. முடிவு

கொழும்பு, ஜூலை 2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொகுதிகளில் எவ்வளவுதொகுதிகளில் போட்டியிட முடியுமோ அவ்வளவு தொகுதிகளில் போட்டியிடுவது என்று ஐ. தே. க. முடிவு செய்துள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற உள்ள இடைத்தேர்தல்களில் போட்டியிடுவது பற்றி நீண்ட நேரம் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. (உ-எ)

### சுபநேரம்

02-07-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7.26 முதல் 8.56 வரை
ராகுகாலம்:-
1 26 முதல் 2. 56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
குமார சஷ்டி விரதம்

### இந்தியப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 2

நேற்று நடைபெற்ற யாழ் பாடசாலை மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேரில் பார்வையிட்டனர். (உ-எ)

# யாழ். மக்கள் வேண்டாம் என்று கூறும்வரை இந்திய நிவாரணம் வந்துகொண்டேயிருக்கும்



வடமராட்சித் தாக்குதலின்போது விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கான நவீன சந்தையை மேற் படத்தில் காணலாம்.

நவீன சந்தைக்கு முன்பாக இருந்த பஸ்தரிப்பு நிலையமும் பாரிய அரச மரமும் விமானத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமுற்று இருப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: ஜெயம்)

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாண மக்கள் தமக்கு உணவு தேவையில்லை எனத் தெரிவிக்கும் வரை இந்திய நிவாரணப் பொருள்கள் யாழ்ப்பாணம் வந்து கொண்டே இருக்கும்.

இலங்கை அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி எண்ணாயிரம் தொன் நிவாரணப்பொருள்கள் யாழ்ப்பாண மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

### யாரும் தடுக்கமுடியாது என்கிறார் குப்தா

அதனை யாராலும் தடுக்க முடியாது.

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய கப்டன் குப்தா இவ்வாறு தெரிவித்தார்.

'பருக்கா' கடைசிக் கப்பல் அல்ல தொடர்ந்தும் கப்பல்கள் வந்து கொண்டிருக்கும்.

ஸ்ரீ லங்காவின் கப்பல்கள் தற்பொழுது துறைமுகத்தில் தரித்து நின்றாலும் 'பருக்கா' கப்பலை துறைமுகத்துக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம்.

இப்படி அவர் தெரிவித்தார். (அ-10)

## டிராக்டரில் சென்றோர் மீது ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

டிராக்டரில்சென்றோர் மீது பளைக்கு அண்மையில் உள்ள புதுக்காட்டுச் சந்தியில் வைத்து நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஒருவர் காயமடைந்தார். டிராக்டரும் சேதமடைந்தது.

தேங்காய் ஏற்றுவதற்கென புதுக்காட்டுச் சந்தியில் இருந்து சென்றவர்கள்மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் முத்துவேலு சுப்பிரமணியம் (வயது 23) என்ற இளைஞர் கையில் காயமடைந்தார்.

இவரே டிராக்டரைச் செலுத்திவந்தவர்.

ஏனைய இருவரும் டிராக்டர் பெட்டியின் கீழ் பதுங்கிக்கொண்டதன் காரணமாக காயமின்றித் தப்பிக் கொண்டனர். (உ-10)

### தொடர்ந்து வரும் உணவுப் பொருள்கள்

சென்னை, ஜூலை 1

யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்காக இந்திய உணவுக் கூட்டுத்தாபனத்துக்கு இன்னும் உணவுப் பொருள்கள் வந்து கொண்டிருக்கின்றன.

கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் யு.என் ஐ. செய்தியாளரிடம் இப்படித் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது. (உ-எ)

## காணமற் போனோர் விவரம் அறிய செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 2

வன்செயல்களின்போது காணமற் போனோர் குறித்து ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் அரச உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களது தற்போதைய நிலை — மற்றும் விவரங்களை உடன் அறிந்து உறவினர்களுக்கு தெரிவிக்கும்.

—இவ்வாறு யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதற்காக காணமற் போனோர் பற்றிய விவரங்களைத் திரட்டும் முயற்சியில் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டிருக்கிறது.

கைது செய்யப்பட்டு பின்னர் எங்கே என விலாசம் தெரியாமல் போனோர், கைது செய்யப்பட்டார்களா என விவரம் தெரியப்படாதோர், உயிருடன் உள்ளனரா எனத் தகவல் தெரியாதோர் ஆகியோர் பற்றிய தகவல்களே திரட்டப்படுகின்றன.

காணமற் போனோரின் பெயர், அவர்கள் கடைசியாகக் காணப்பட்ட நேரம், திகதி மற்றும் விவரங்களை அவர்களது

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### ஜீ சீ. ஈ. பரீட்சை திட்டமிட்டபடி நடக்குமாம்

கொழும்பு, ஜூலை 2

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி வடக்கு, கிழக்கு உட்பட சகல பகுதிகளிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் திரு. ஸ்டான்லி பெரேரா அறிவித்தார்.

பரீட்சை நிலையங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுவது குறித்து பாதுகாப்பு அமைச்சில் அடுத்த வாரம் உயர்மட்ட மாநாடு ஒன்றும் நடைபெற உள்ளது. (உ-எ)

# தெல்லிப்பளை ஆஸ்பத்திரியும் வெறிச்சோடுகிறது

பலாலி, ஜூலை 2

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு மருத்துவத் தேவைகளுக்காக மக்கள் செல்வது மிகவும் குறைந்து வருகிறது.

வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிகள் வைத்தியசாலைக்கு வருகைதந்து தமது கடமைகளை ஆற்றுகின்ற போதிலும் நோயாளர்கள் பயம் காரணமாக வைத்தியசாலைக்கு வரத் தயங்குகின்றனர்.

வைத்தியசாலையைச் சுற்றி அடிக்கடி ஷெல் விழுந்து வெடிப்பதும் இதற்குக் காரணம் ஆகும். நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறும் வார்ட்டுக்கள் அதிகளவில் வெறிச்சோடிக்கிடக்கின்றன.

(இ-119)

### மாகாண சபை யோசனைகள் அச்சிடப்பட்டு விநியோகம்

கொழும்பு, ஜூலை 2

மாகாணசபை யோசனைகளை அச்சடித்து தமிழ் பகுதிகளில் விநியோகிக்க அரசு முடிவு செய்துள்ளது.

யாழ் குடாநாட்டில் முதல் வடமராட்சியில் இவைவிநியோகிக்கப் படும்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வடமராட்சி இருப்பதால் அவர்களே மக்களுக்கு இவற்றை விநியோகிப்பர்.

மாகாண சபைகள் யோசனைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சாகின்றன. (உ-எ)

# குடாநாட்டிலுள்ள சகலருக்கும் இந்திய நிவாரண உதவி தேவை என வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ் குடாநாட்டில் சகலருக்கும் இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் கிடைப்பதற்கு வழி செய்யுமாறு யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு எஸ். பாலசுப்பிரமணியம் யாழ் அரச அதிபரையும், இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

செயலகத்தில் நடைபெற்ற, அரச அதிபர் தலைமையிலான கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கேட்டார்.

இக் கூட்டத்திற்கு ஸ்ரீ லங்கா - இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலிருந்து தற்போது ஆயிரம் தொன் உணவுப்பொருள்களே கிடைத்துள்ளன.

இன்னும் பத்தாயிரம் தொன் உணவுப்பொருள்கள் கிடைத்தாலேயே யாழ் குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் நிவாரண உணவு வழங்கலாம் என்று யாழ் அரச அதிபர் பதிலுரைத்தார்.

(இ-ள)



## முதலாண்டு நினைவஞ்சலி

**தம்பிராசா ஸ்ரீரதன்**

(கண்ணன் லொறிச்சேவை)

இணுவில்.

தோற்றம்: 22 - 2 - 1955 மறைவு: 13 - 7 - 1986

திதி: 2 - 7 - 1987

"...அன்னையாகவும் தந்தையாகவும் சகோதரராகவும் பிள்ளையாகவும் வேண்டிய நேரங்களில் வேண்டியவாறு அன்பைப் பகிர்ந்து கொண்ட ஸ்ரீரதனை நாம் எம்மில் நின்றும் வேருகப் பிரிந்துணர்தல் முடியுமோ"?

தம்பிராசா குடும்பத்தினர்

மன்னுர் எக்ஸ்பிரஸ்

இணுவில். (1256)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

**முழுநேரக் கல்விப் பட்டப்படிப்பின் டிப்புளோமா**

கற்கைநெறி – 1987/88

**புதிய அனுமதி.**

பட்டம் பெற்றபின் மூன்றுண்டுகால ஆசிரியர் சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 31-07-1987 இல் 50 வயதிற்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூ.10/- செலுத்திய பற்றுச்சீட்டினைக் கல்விக் கிளை, சிரேட்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேட்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 31-07-87 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல்வேண்டும்-

—பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்


### பிரெஞ்சு டாக்டர்கள் சிகிச்சை

கொழும்பு, ஜூலை 2

மூதூர் சூரன்கல் பகுதியில் தஞ்சமடைந்துள்ள தம்பலகமம் தமிழ் அகதிகளுக்கு பிரெஞ்சு வைத்திய நிபுணர்குழு ஒன்று வைத்திய உதவிகளை அளித்து வருகின்றது.

இந்த நிபுணர்குழு, சூரன்கல் பகுதியில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கு அத்தியாவசிய மருந்து வகைகளை வைத்துள்ளது.

இக்குழு வாரம் ஒரு முறை அங்கு சென்று அகதிகளுக்கு வைத்திய உதவி அளித்து வருகின்றது. (இ-எ)

# நீதிமன்ற கட்டடங்களை வந்து பார்க்குமாறு

## சட்டத்தரணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்களை வந்து நேரில் பார்வையிடும்படி இந்திய — ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளை யாழ் சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுள்ளது.

யாழ் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் திரு. த. ராஜராஜேஸ்வரன், முன்னுள் மாநகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன், நொத்தாரிசு சங்கப் பிரதிநிதி திரு. க. மு. தர்மராசா ஆகியோர் அடங்கிய குழு ஒன்று இந்திய செஞ்சிலுவைச் சங்க, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க, யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளை நேற்று சந்தித்தது.

இச் சந்திப்பின் போது நீதிவான் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், யாழ் மாவட்ட நீதிமன்றம், மாவட்ட நீதிமன்ற அலுவலகம், நீதிவான் நீதிமன்ற அலுவலகம், சட்ட நூல் நிலையம் என்பவற்றை நேரில் வந்து பார்க்கும்படி செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளைக் குழு கேட்டுக்கொண்டது.

தினமும் இந்த அலுவலகங்கள்மீது ஷெல் தாக்குதல்கள் துப்பாக்கிச் சூடுகள் நிகழ்வதால் எதுவித கடமையும் செய்ய முடியாது உள்ளது என்றும் குழு எடுத்துக் கூறியது. (இ-ள)

# உண்ணுவிரதம்

### இளவாலையில்

இளவாலை, ஜூலை 2

இளவாலை பெரிய சந்தியில் நூற்றுக்கணக்கான பெண்களும் இளைஞர், யுவதிகளும் திரண்டிருந்து ஒரு நாள் உண்ணுவிரதம் இருந்தனர்.

ஆசிரியர் செ. இராசநாயகம் தமது உரையில் இந்தியா எமது விடுதலை இயக்கத்தை ஆதரித்து வேண்டிய உதவிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

(இ-48)

### பளையில்

பளை, ஜூலை 2

ஈழத்தையும்- அதற்காகப் போராடும் விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கும்படி இந்திய அரசைக் கோரி, பளை தம்பகாமம் கேடில்ஸ் படிப்பகத்தில் உண்ணுவிரதம் நடைபெற்றது.

(இ)

### மானிப்பாயில்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளை இந்தியா அங்கீகரிக்கக் கோரி மானிப்பாய் றெட்றேஞ்சஸ் சனசமூகநிலைய முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணுவிரதம் நடைபெற்றது.

நிலையத்தலைவர் திரு. செ. சிவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த உண்ணுவிரதத்தில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

(இ-ள)

### மீசாலையில்

கொடிகாமம், ஜூலை 2

மீசாலை வடக்குப் புத்தூர்ச் சந்தியிலும் மீசாலை பழைய புகையிரத நிலையப் பகுதியிலும் உண்ணுவிரதம் அனுட்டிக்கப்பட்டது. (இ-75)

### கொடிகாமத்தில்

கொடிகாமம், ஜூலை 2

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகளின் நல்லெண்ணம், முயற்சி ஆகியவற்றைப் பலப்படுத்துமாறு கோரியும், இதுவரை நடைபெற்ற இராணுவ அட்டூழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறும் கொடிகாமம் சந்தை மைதானத்தில் உண்ணுவிரதம் நடைபெற்றது. (இ-75)

### புங்குடுதீவில்

புங்குடுதீவு, ஜூலை 2

புங்குடுதீவு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி வித்தியாலய முன்றலிலும் பெருங்காடு கந்தசுவாமி கோவில் முன்றலிலும் இடம்பெற்ற உண்ணுவிரதங்களில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். (இ-131)

# டொமினிக் ஜீவாவுக்கு 60ஆண்டு பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

மல்லிகை ஆசிரியரும், இலங்கை சாகித்தியமண்டலப் பரிசுபெற்ற எழுத்தாளருமான திரு. டொமினிக்ஜீவாவின் 60 ஆவது வயதையொட்டி அவரைக் கௌரவிக்கும் நோக்கோடு தேநீர் விருந்து உபசார வைபவம் ஒன்று நல்லூர் இந்து விடுதி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத் தலைவர் திரு. சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. சு. வித்தியானந்தன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ.வி. கே. சிவஞானம் கலந்து கொண்டார்.

கம்பன் கழகத்தின் சார்பில் எழுத்தாளர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஜீவாவுக்கு பொன்னுடை போர்த்துக் கௌரவித்தார்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், வாசகர்கள் ஆகியோர் பெரும் திரளாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினுர்கள்.

யாழ் கம்பன் கழகமும் ஜீவாவின் மணிவிழாக் குழுவும் இணைந்து இந்த வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

இறுதி நிகழ்ச்சியாக டொமினிக்ஜீவா நன்றி உரை நிகழ்த்தினுர்.

(இ-88)

ஸ்ரீ லங்காவின்

# உள் விவகாரத்தில் தலையிட வேண்டாம்

## இந்தியாவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 2

ஸ்ரீலங்காவின் உள் விவகாரத்தில் தலையிட வேண்டாம்.

ஸ்ரீ லங்கா பௌத்த காங்கிரஸ் இப்படி இந்தியாவுக்குக் கூறியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடந்த ஸ்ரீ லங்கா பௌத்த காங்கிரஸின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இது சம்பந்தமான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஒற்றையாட்சி முறைக்கு பாதகமான நாட்டினைப் பிளவு படுத்தும் எந்த வழியையும் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாகக் காண வேண்டாம் என்று ஸ்ரீ லங்கா அரசைக் கோரும் இன்னெரு தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (இ-எ)

### நிவாரண உதவி

சாவகச்சேரி, ஜூலை 2

வடமராட்சியில் பாதிக்கப்பட்ட எட்டு அறவழிப் பாலர் பாடசாலை மாணவர்களது குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவினர் நேரில் சென்று நிவாரண உதவிகளை வழங்கினர்.

(இ-31)

# மூதூரில் சீருடையினர் பெரும் அட்டகாசம்

கொழும்பு, ஜூலை 2

மூதூர்த் தொகுதியில் தமிழ்க் கிராமங்களில் சீருடையினர் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

பூநகர், பூமரத்தடிச் சேனை, மாவடிச்சேனை, இலங்கைத்துறை, வெருகல், முகத்துவாரம் பகுதி மக்கள் ஈச்சிலம்பத்தை பிரசைகள் குழுவிடம் இது சம்பந்தமாக முறையிட்டனர்.

பூமரத்தடிச் சேனைக் கிராமத்தில் மீண்டும் குடியேறிய தமிழர்களை சீருடை தரித்தவர்கள் கடந்த 9ஆம் திகதி தாக்கி, அவர்களின் உடைமைகளைச் சேதப்படுத்தினர்.

தீவிரவாதிகளைத் தேடும் போர்வையில் அப்பாவித் தமிழர் இப்படித் துன்புறுத்தப் படுகின்றனர் என்றும் பிரசைகள் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

(உ-எ)

### ப. நோ. கூ. சவில் இந்திய உணவு களஞ்சியப் படுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் யாவும் ப. நோ. கூ. சங்கங்களிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

விநியோக வேலைகளை உ. அ. அதிபர் பிரிவுகள் மூலம் செஞ்சிலுவைச் சங்கம் மேற்பார்வையிடும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. வை. மூ. [illegible] தெரிவித்தார். (இ-ள)

### வங்கியில் கொள்ளை

கொழும்பு, ஜூலை 2

கொழும்பில் இருந்து பதினைந்து மைல் தொலைவில் உள்ள கஹட்டுவ கிராம வங்கி இனந்தெரியாத நபர்களினுல் ஞாயிறு காலை கொள்ளை இடப்பட்டது.

மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் ஆகியன [illegible] இடப் [illegible] என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

### ஓய்வு பெறும் அதிபருக்கு பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

பெரியபுலம் மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு. வே. சி. சிவபாலசிங்கம் ஓய்வு பெறுவதால் அவரின் சேவையைப் பாராட்டி பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து பிரிவு உபசார விழா ஒன்றை இன்று பிற்பகல் 3 மணிக்கு நடத்துகின்றன.

திரு. வே. சி. சிவபாலசிங்கம் 38 வருடங்கள் சேவை செய்துள்ளார்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளராகவும், கல்வித் திணைக்களத்தின் கடன் வழங்கும் யாழ் மாவட்டச் செயலாளராகவும் கடமையாற்றிய இவர் 1974 முதல் இப்பாடசாலையின் ஆசிரியராக இருந்து வந்தார். (இ)



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திரு. க. செல்லையா**

அதிபர் அவர்கள்

தோற்றம்: 05-12-1936 மறைவு: 24-06-1985

திதி: 02-07-1987

என் அருமைத் தெய்வமே!
உங்கள் பிரிவால் உள்ளம்
நெகிழ்ந்து நொந்து
ஈராண்டு சென்றதையா!
சென்ற இந்த நாட்களிலே
சீராய்த் துயின்றறியேன்
சுவை தெரிய உண்டறியேன்
மாருத் துயரம் ஐயா இந்த
மாநிலத்தில் வாழும் மட்டும்
எங்கள் குலவிளக்கே
உங்கள் திரு உருவம்
என்றென்றும் எம்முன்னல்
அணையாத சோதி ஐயா......!
உங்கள் ஆத்ம சாந்திக்கு
இறைவனை வேண்டுகிறேம்.

பிரிவால் துயருறும்

**மனைவி, மகன், மகள்மார், உறவினர்.**

திருவேரகம்
ஆசிரியமணி செல்லையா வீதி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.


HORIZON ENTERPRISES

**பிரயாண ஒழுங்குகள்**

✶ டுபாய் ✶ குவைத் ✶ சவூதிஅரம்கோ கொம்பனி

டிரைவர் விமானநிலையக்கிளீனர் ஹொஸ்பிடல்கிளீனர்
சமையற்காரர் H. V. டிரைவர் தச்சுவேலை
பணிப்பெண்கள் மேசன்

**சிங்கப்பூர் பணிப் பெண்கள்**

குறைந்த கட்டணத்தில் வயதெல்லை 17 - 35

மற்றும் அனைத்து மத்தியகிழக்கு நாடுகளுக்கான வெற்றிடங்கள் மிக அதிகளவில் எம்மிடம் இருப்பதால் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக எம்முடன் தொடர்பு கொண்டு நாம் முதல் தடவையில் அவர்களை கொழும்பு அழைத்துச் சென்று மீண்டும் யாழ் திரும்பாது எமது பாதுகாப்புடன் சகல வசதிகளும் நிறைந்த எங்கள் சொந்த வதிவிடத்தில் வைத்து மிகத் துரிதகதியில் பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேம். எந்தக் காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எமது முகவர் நிலையத்தினுல் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப் படும். மற்றும் எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டுக்கள் [ PASS PORT ] குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

★ மாலைதீவு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: வயதெல்லை 17 — 35. மிகக்குறைந்த கட்டணத்தில் துரிதகதியில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல, 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

HORIZON ENTERPRISES
No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Telephone: 574000


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

அறிவாளியின் காலம் அவனது எண்ண வளர்ச்சியைப் போல் அதிகரிக்கிறது. முட்டாளின் காலம், அவனது நேரத்தைப்போல் அதிகரிக்கிறது.

— அடிஸன்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

02.7.1987 த.பெ.இல: - 23

# பொதுப் பரீட்சைகளை பகிஷ்கரிப்பது சரியா?

இம்மாத இறுதியில் நடைபெற இருக்கும் ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சை உட்படப் பொதுப் பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பது என்று யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் கூடி முடிவு செய்துள்ளனர். பரீட்சைகளை பகிஷ்கரிப்பதை பிரசித்தப்படுத்தும் விதத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நேற்று நடைபெற்றது.

பரீட்சைகளை பகிஷ்கரிக்கும் முடிவு சரியானதா என்பது குறித்து இருபக்க அபிப்பிராயம் நிலவுவதைக் காண முடிகிறது.

உரிமைப் போராட்ட காலத்திலும் வருங்காலப் பிரசைகளான மாணவர்களின் கல்விக்குக் குந்தகம் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும். சரியோ, தவறோ இப்போதைய கல்வித்திட்டத்தில் பொதுப் பரீட்சைகள் தான் மாணவன் ஒருவனின் கல்வி வளர்ச்சி நிலையை அளக்கும் மானிகளாக உள்ளன. ஆகையால் பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பது எதிர்காலச் சமூகத்தினது கல்வியைப் பாழடிப்பதற்கு ஒப்பாகும் என்பது ஒரு கருத்து.

பரீட்சைகளை பகிஷ்கரிக்கத் தொடங்கினால் மாணவர்கள் கல்வியில் நாட்டம் கொள்வது இயற்கையாகவே குறைந்து விடும் என்பதும் அதே பக்கத்தார் வாதம். இவை மறுக்கப்படக் கூடியவை அல்ல. உண்மையானவை. கருத்தாழம் மிக்கவை. தூர திருஷ்டியுடன் முன் வைக்கப்படுபவை.

ஆனால் —

இன்றைய சூழ்நிலையில், அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் இராணுவ அட்டகாசம் புரியும் பின்னணியில், தமிழ் மாணவர்கள் எல்லோரும் சம வாய்ப்புகளுடன் கல்வி பயில முடியாத நிலை உருவாகி உள்ளது.

இராணுவத் தாக்குதலுக்கு உள்ளான பகுதி மாணவர்களின் கல்வி நூற்றுக்கு நூறு வீதம் தடைப்பட்டிருக்கிறது. சில பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாறியிருக்கின்றன. பல பாடசாலைகள் குண்டு, ஷெல் வீச்சால் சேதமுற்றுவிட்டன. பல மாணவர்கள் கைதாகி இருக்கிறார்கள். இன்னும் பலர் அகதிகளாகி கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

குடாநாட்டில் இராணுவத் தாக்குதலுக்கு உள்ளாகாத பகுதிகள் என்று கூறுவதற்கு எதுவுமில்லை. வானத்தாக்குதல் வந்த பின்னர் பாடசாலை நேரங்களில் கூட மாணவர் பதற்றத்துடனேயே பயிலும் நிலை. மன அமைதியும், நிம்மதியும் இல்லாமல் விஷயங்களைக் கிரகிக்கும் உளவியல் கொள்ளளவும் முற்றாக அற்றுப் போகிறது.

ஆகையால் இராணுவத் தாக்குதலால் அதிக பாதிப்புக்கு உள்ளான பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி, பாதிப்புக் குறைந்த பகுதி மாணவர்களும் சாதாரண நிலையில் கல்வி பயிலமுடியாத அவலம்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் எமது மாணவர்கள், தென்னிலங்கையில் அமைதியான சூழ்நிலையில் கல்வி பயிலும் மாணவர் தோற்றும் பரீட்சைகளுக்கு— போட்டிப் பரீட்சைகளுக்குத் —தோற்றி எப்படித் தமது திறமையைக் காண்பிக்க முடியும்? குறிப்பாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெறுவது எப்படி? பாடசாலைகளில் இருந்து முதன் முறையாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாடத்திட்டத்தையே படித்து முடித்திருக்கவில்லையே!

கல்வி அறிவு பெறுவது ஒவ்வொரு மாணவனதும் அடிப்படை உரிமை. ஆனால், அந்த உரிமை தமிழ் மாணவருக்கு, குறிப்பாக இவ்வருடத்தில் மிகத் தீவிரமான இராணுவ நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட குடாநாட்டு மாணவருக்கு முற்றாக மறுக்கப்பட்டு இருக்கிறது.

மன அமைதியுடன் கல்வி பயிலக்கூடிய அந்த அடிப்படை உரிமை பறிக்கப்பட்டது என்பதை வெளி உலகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்குப் பொதுப்பரீட்சைகளைப் பகிஷ்கரிக்கும் முடிவு நிச்சயம் உதவும்.

ஆனால் இந்தப் பகிஷ்கரிப்பு விடயத்தில் மாணவர் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் பூரண ஒற்றுமை தேவை. பகிஷ்கரிப்பில் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு நின்றால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்ற உணர்வு உண்டாக வேண்டும். பயணத்தைக் குழப்பும் குதிரைகளாக எவரும் மாறக் கூடாது.

எல்லோரும் ஒருமித்த கருத்தோடு, ஒற்றுமையோடு பரீட்சைகளைப் பகிஷ்கரித்தால்—

அரசாங்கம்—

மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்—

வெளி உலகத்துக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்றி ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகளால் மாணவர் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது ஆகையால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சகல மாணவர்களும் பரீட்சைப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டால் வெற்றிக்கு அதிக வாய்ப்பு உண்டாகும்.

## ★ தூதரக கட்டடம் இடிக்கப்படும்

மாஸ்கோ, ஜூலை 1

மாஸ்கோவில் அமெரிக்கத் தூதரகத்துக்குக் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் இடிக்கப்பட வேண்டும்.

இப்படி அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஜேம்ஸ் ஷீல் சிங்கர் தெரிவித்தார்.

புதிய தூதரகக் கட்டடம் கட்டப்படும் வரை வாஷிங்டனில் ரஷ்யத் தூதரகத்துக்கு என்று கட்டப்பட்ட கட்டடத்தை ரஷ்யா பாவிக்க அனுமதிக்கப்படக் கூடாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-எ)

## ✲ வளைகுடாவுக்கு

# ஐ.நா. சமாதான கடற்படை!

## பொதுச் செயலாளர் குயிலர் யோசனை

மாஸ்கோ, ஜூலை 1

அனுமதி வழங்கப்பட்டால் வளைகுடாவில் பதற்றத்தைத் தணிக்க ஐ.நா. சமாதானக் கடற்படை அணி ஒன்றை அனுப்பி வைக்கத் தயார்.

இப்படி ஐ.நா. பொதுச் செயலாளர் பெரேஸ் டி குயிலர் அறிவித்திருக்கிறார்.

சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த திரு. பெரஸ் டி குயிலர் திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ்வை சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போதே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

சர்வதேச ரீதியில் ஏற்படும் பதற்றம், நெருக்கடிகளை தணித்து சமாதானத்தை நிலைநாட்டக் கூடிய வல்லமை ஐ.நா.வுக்கு உண்டு.

ஐ.நா.வுக்கு ஆணை வழங்கப்பட்டால், வளைகுடா நெருக்கடி சமாதானத் தீர்வு காண பல நாட்டுக் கடற்படைக் கப்பல்கள் அணி ஒன்றை அனுப்ப நான் தயாராக உள்ளேன்.

இப்படி பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் அறிவித்தார். (இ-எ)

## ஏவுகணைத் தாக்குதல்; ஈரான் தொடருகிறது

தெஹ்ரான், ஜூலை 1

இரண்டு எண்ணெய்க் கப்பல்கள் வளைகுடாவில் ஈரானின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகின.

நோர்வே, லைபீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவை இக்கப்பல்கள்,

ஐந்து வாரங்களுக்குப் பின்னர் வளைகுடாவில் இடம்பெற்ற ஏவுகணைத் தாக்குதல் சம்பவம் இதுவாகும். (உ-எ)

## அங்கோலா மீது தென் ஆபிரிக்கா தாக்குதல்

ஜோஹன்னர்ஸ்பர்க், ஜூலை 1

அங்கோலாவின் தென் பகுதி நகரம் ஒன்றின் மீது தென் ஆபிரிக்க அரசுப் படைகள் தாக்குதல் நடத்தின என்று அறிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் தென் ஆபிரிக்கா இரண்டு படைப்பிரிவுகளைப் பயன்படுத்தியது என்று அறிவிக்கப்படுகின்றது.

யுனிடொ கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு வழங்குவது என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்தே தென் ஆபிரிக்காவின் தாக்குதல் இடம்பெற்றது. [இ-எ]

# அமைச்சரின் சட்டையைப் பிடித்து இழுத்த எம்.எல்.ஏ.

திருவனந்தபுரம், ஜூலை 1

அமைச்சரின் சட்டையைப் பிடித்து இழுத்த எம்.எல் ஏ. இரண்டு வாரங்கள் சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதபடி தடை செய்யப்பட்டார்.

கேரள மாநில சட்டசபைக் கூட்டத்தில் இச்சம்பவம் கடந்த செவ்வாய் இடம் பெற்றது.

விவாதத்தின் ஒரு கட்டத்தில் அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

அப்போது கேள்வி கேட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எம். எல். ஏ. திரு. ராகவன் அமைச்சருக்கு அருகே சென்றார்.

அவரின் சட்டையைப் பிடித்து இழுக்க முயன்றார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி எம். எல். ஏ.க்கள் ஓடிச்சென்று விலக்கி விட்டனர்.

இறுதியில் முதலமைச்சர் இ. கே. நாயனார் கொண்டு வந்த பிரேரணையைத் தொடர்ந்து, அந்த எம். .எல். ஏ. பதினைந்து தினங்கள் சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது என தடை விதிக்கப்பட்டது. (இ-எ)

## நெருக்கடி தொடர்கிறது

சுவா, ஜூலை 1

பிஜி அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் டாக்டர் பவித்ரா தலைமையிலான குழு கவர்ணர் ஜெனரலுடன் நடத்திய பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவில்லை.

சகல மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்று டாக்டர் பவித்ரா குழு வலியுறுத்தியது. (இ-எ)

## குந்தகம்

பெல்கிரேட், ஜூலை 1

யூகோஸ்லேவியாவின் தென் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இனங்களுக்கு இடையேயான மோதல்கள் நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும்.

இப்படி ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்துள்ளது.

தென் மாகாணத்தில் சிறுபான்மையினத்தவராக உள்ள அல்பேனிய மக்கள் பாரபட்ச நடவடிக்கைகள் காட்டப்படுவதாகக் கூறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-எ)

## வித்தாரம்

எப்படி முரளி! பாட்டோடை வாறாய். நல்ல சாரீரமாய் இருக்கு. பாடிப் பழகினால் ஒரு நல்ல பாட்டுக்காறனாய் வரலாம் எண்டு நினைக்கிறேன். அப்படி ஏதாவது ஆசை இருக்குதோ...!

கலை எண்டது ஒரு கொடை அப்பா! அது எல்லாருக்கும் சரிவராது. சில பேர் காசைச் செலவழிச்சு வலிஞ்சு கலைஞராய் வர நினைக்கிறவை. ஆனால் அது சரிவாறயில்லை. இயற்கையிலேயே கலை ஆர்வம் இருக்கிறவை முயற்சி எடுத்தால் எப்பிடியும் அந்தத் துறையிலை பிரகாசிக்கலாம். உனக்கு நல்ல சாரீரம் இருக்கிறபடியால் கடவுள் தந்த அருளை வீணடிக்காதை, சங்கீதத்தைப் பழகு.

முந்தி ஒரு காலத்திலை சங்கீதம், நாடகம், நாட்டியம் போன்ற கலையளைச் சிலர் குறைச்சுப் பாத்தது உண்டு. இப்ப அதுகள் பழகிறது ஒரு பாஷனாகிவிட்டுது, சில பேர் பத்திரிகை அடிச்சு, பத்திரிகையிலை விளம்பரப்படுத்தி தடபுடலாக அரங்கேற்றம் வைப்பினம். அவ்வளவோடு கலைப்பயிற்சிக்கு முற்றுப் புள்ளி போட்டு விடுவினம். உப்பிடி எண்டா, எப்பிடிக் கலை வளர்ச்சி அடையும்? உண்மையான கலை ஆர்வம் உள்ளவை கலையளைப் பழகின அதுகள் அழியாதப்பா!

உன்ரை பாட்டைக் கேட்டவுடனை தான் எம். எஸ். சுப்புலட்சுமியின் ஞாபகம் வருகுது.

இண்டைக்கு மாஸ்கோவிலை 'இந்திய விழா' ஆரம்பமாகுது எண்டு கேள்விப் பட்டிருப்பாய். விழாத் தொடக்கத்திலை எம். எஸ்.ஸின் பக்திப் பாடல் தான் முதல் நிகழ்ச்சி.

அது மட்டுமா, கிரெம்ளின் மாளிகையிலையும் எம். எஸ்ஸின்ரை 40 நிமிஷ தனிக்கச்சேரி நிகழ்ச்சியும் நடக்கப் போகுது.

ஏன், அவமுந்தி 'ஐ.நா. சபை நிகழ்ச்சி ஒண்டிலையும் பாடினவ தானே. உப்பிடியான சந்தர்ப்பங்களிலை தான் கலைஞருக்கு மட்டுமில்லாமல் கலைக்கும், நாட்டுக்கும் பெருமை வாறது!

இந்தியாவின்ரை கலை வளர்ச்சி கரை கடந்தது. அரசியல் ஞானம்,சாணக்கியத்திலை எண்டாப் போலை அது என்ன குறைஞ்சதே?

அப்பிடி நினைச்சுத் தான் அச்சாணியார் அன் கோவும் கொந்துராத்தர் லிமிட்டெட்டும் இந்தியாவை வாய்க்கு வந்தபடி எல்லாம் வசைபாடி தென்னிலங்கையிலை செல்வாக்குத் தேட நினைக்கினம் போலை!

அச்சாணியார் நெடுகப் பணயம் வைக்கிற விஷயத்திலை கெட்டிக்காறர். இராயண்ணைமார் தமிழ்ப் பொதுமக்களை வாகனங்களில் பணயம் வைச்சு ரோந்து செல்லுறது பிழையில்லை எண்டு வாதாடிய விண்ணன் எல்லே அவர்!

அமெரிக்காவில் இருந்து அவர் வாறதற்கு முன்னரே இன்னொரு "ஒப்பரேஷன் லிபரேஷனு"க்கு ஆயத்தம் நடப்பதாய் சொல்லப்படுகுது. வடமத்தியிலிருந்து வடக்கு நோக்கித் துருப்புகள் நகர்வதாக ஒரு தகவல். காங்கேசனில் இந்திய நிவாரணக் கப்பல் "பறுக்கா"வை உள்ளே வராமல் வெளியே தடுத்து வைச்சுருகுணுவிலை இருந்து ஆயுதம் இறக்குகினம் எண்டது மற்றது.

இதுக்கிடையிலை வடமராட்சியிலை "ஒப்பரேஷன்" நடத்திய ஜெனரலுகள் ஒவ்வொருவரும்

# மூதூரில் கைதான பெண்ணுக்கு ஏற்பட்ட பயங்கரமான அனுபவம்

பூஸா இராணுவ முகாமில் இடம் பெறும் சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை ஆறுபக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் மூன்றாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

**1985** பிற்பகுதியில் மூதூரில் கைது செய்யப்பட்ட ஒரு பெண் அண்மையில் பூஸா முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இவர் இன்னொரு பெண்ணை பாதுகாப்புப் படையினர் முகாமில் சேர்த்ததைக் கண்டார்.

அந்தப் பெண் தெரிவித்தவற்றை இவர் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அனுப்பிய வாக்கு மூலத்தில் விவரித்து இருக்கிறார்.

வாக்கு மூலத்தின் சில பகுதிகள் வருமாறு:

'அவளை பூஸாவுக்குக் கொண்டு வந்தார்கள். அவளின் இரண்டு மணிக்கட்டுக்களிலும் காயங்கள் காணப்பட்டன. கை விரல்களை மடக்க முடியாத நிலையில் அவள் இருந்தாள்.

மூதூர் பொலீஸார் தன்னை முழு நிர்வாணமாக்கி மானபங்கப் படுத்தினார்கள் என்றும்,

பின்னர் இரண்டு மணிக்கட்டுகளையும் கட்டி தலை கீழாகத் தொங்கவிட்டார்கள் என்றும் அவள் என்னிடம் சொன்னாள்.

1986 மார்ச் மாதம் அவளை நாம் இருந்த அறைக்குள் அடைத்தனர். அவளின் உடல் முழுவதிலும் சாட்டைகள் காணப்பட்டன. நிலத்தில் உட்கார முடியாத நிலையில் அவள் இருந்தாள். தன்னால் நிலத்தில் குந்திஇருக்க முடியாது என்று அவள் சொன்னாள்.

காரணம் என்ன என்று நானும் ஏனையவர்களும் துருவித் துருவிக் கேட்டோம்.

மூதூர்ப்பொலீஸார் தன்னை நிர்வாணமாக்கிய பின்னர் குண்டாந்தடிகொண்டு செய்த சித்திரவதையால் தனது மர்ம உறுப்பில் மோசமான நோவு ஏற்பட்டதாகவும் அதன் காரணமாகவே குந்தி இருக்க முடியவில்லை என்றும் அவள் சொன்னாள்.

"தன்னுடன் கைது செய்யப்பட்ட இன்னும் பதினான்கு இளம் பெண்களை மூதூர்ப் பொலீஸார் கற்பழித்தனர் என்றும் அவள் சொன்னாள்."

இப்படி வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் முக்கியமாக, மட்டக்களப்பில் இருந்து பல தடுப்புக்காவல் கைதிகள் பூஸா முகாம் கொண்டு செல்லப்பட்டனர். பெரும்பாலானவர்களில் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்பட்டன.

1986பிற்பகுதியில் விடுதலை செய்யப்பட்ட தடுப்புக் காவல் கைதி ஒருவர் சொல்கின்றார்;—

"மட்டக்களப்பில் இருந்துபூஸா கொண்டு வரப்படும் கைதிகளில் காயம் இல்லாதவர் ஒருவராவது இல்லை. "ஒரு கைதியின் கைகள், கால்கள், மலத்துவாரம் முதலியன வற்றில் சூடாக்கிய இரும்புக் கம்பியினால் சூடு போடப்பட்ட அடையாளங்கள் இருந்தன. காயங்கள் ஆறுதநிலையில் காணப்பட்டன.

"அந்த நபர் சாரம் உடுப்பதற்கே மிகவும் கஷ்டப்பட்டார்.

"ஒரு நாள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும்போது உயிரிழந்தார்.

"அவரைப் பார்ப்பதற்கு உறவினர்கள் பூஸா வந்தனர். அவரைத் தகனம் செய்த பின்னர் எடுத்து வைத்திருந்த சாம்பல்தான் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இப்படி விடுவிக்கப்பட்ட நபர் சொன்னார்.

(வளரும்)



## பொய்யாமொழி

**குறள்:**

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும்
அரண்சேர்ந்தாம்.
ஆக்கம் பலவுந் தரும்.

**பொருள்:**

[illegible] பொருந்திய வலிமை உடையவர்க்கும் அரணோடு பொருந்தி ஏற்படுகின்ற வெற்றியானது பலவகைப் பயன்களையும்

# மே 26 தாக்குதல் உயர்மட்ட ஆலோசனைக்கு இந்தியாவைத் தூண்டியது

'யுத்தம் இல்லாமல் வலிமை காட்டல்' என்ற தலைப்பில் மனோஜ்ஜோஷி புரொண்ட்லைன் ஜூன் 13-26 இதழில் எழுதிய கட்டுரையின் மூன்றாம் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவத் தாக்குதல், யாழ்குடாநாடு மீதான பொருளாதார முற்றுகை காரணமாக ஆயிரக்கணக்கான தமிழர் துன்பப்படுகின்றனர்; குடிமக்களும் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுகின்றனர்.

பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண தனது நல்லெண்ண உதவியை வழங்கும் அதே நேரத்தில் யாழ்ப்பாண மக்களின் துன்பத்தைச் சகிக்க முடியாத நிலைமை இந்தியாவுக்கு கடந்த மார்ச் மாதம் ஏற்பட்டது.

பொருளாதார முற்றுகைக்கு இலக்கான யாழ் குடாநாட்டுக்கு தன்னிச்சையான முறையில் உணவுப் பொருள்களை அனுப்பும் எண்ணத்தை இந்தியா மறைமுகமாகத் தெரிவித்தது.

விமானம் மூலம் உணவுப் பொதிகளை யாழ் மீது போடுவது என்ற திட்டமும் அந்தக் காலப் பகுதியில் தயாரிக்கப்பட்டது.

பயர்பாக்ஸ்,போபர்ஸ் விவகாரங்களினால் அப்போது இத்திட்டத்தைச் செயல் டுத்த முடியாத நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது.

மே மாதம் 26ஆம் திகதி ஆரம்பமான இராணுவத் தாக்குதல்கள் உயர்மட்ட ஆலோசனைகளை மேற்கொள்ள இந்திய அரசைத் தூண்டியது.

இதன் பலனாக திட்டம் ஒன்று உதயமானது.

முதலில் ஸ்ரீலங்கா அரசின் ஆதரவுடன்ராமேஸ்வரத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஆயுதமற்ற செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக நிவாரண உதவிகளை அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசு இதற்கு ஆதரவுதராது என்று முதலில் எண்ணப்பட்டது.

அப்படியே உணவுப் படகுகள் ராமேஸ்வரம் திரும்பின.

திரும்பிய 24 மணித்தியாலங்களுக்கு இடையில் இந்திய விமானப் படை நிவாரண உணவுப் பொருள்களை யாழ் குடா மீது போட்டது.

(வளரும்)

## குடும்ப நல சேவையாளர் அவசரக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தெல்லிப்பளைப் பகுதி குடும்ப நல சேவையாளரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவிலிலுள்ளசுகாதாரபணிமனையில் சமுகமளிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரியால் கோரப்பட்டுள்ளனர்.

இப்பகுதிக்கு வெளிப்பிரதேசத்திலிருந்து பயிற்சிக்காக வந்துள்ளகுடும்ப நல மாணவிகளின் ஒழுங்குகளைக் கவனிப்பதற்கும்—

மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் சுகாதார பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கவும் இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல வித
ஜவுளித் தெரிவுகளுக்கு
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

02-07-1987 வியாழக்கிழமை

ராஜ் கோபால்ஸ்
(தற்காலிக இடம்மாற்றம், மயூரா சென்ரர் உட்புறம்)
திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகளைப் ★
பெற்றுக்கொள்ளலாம்.
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## காங்கேசனில் இரு காகங்களும் இரு ஆடுகளும்

### இந்திய செய்தியாளர் கண்டது

சென்னை, ஜூலை 2

காங்கேசன்துறையில் சுதந்திரமாக உலாவித் திரியும் இராணுவத்தினரிடையே உயிரினங்கள் என்ற முறையில் இரண்டு காகங்களையும், இரண்டு ஆடுகளையுமே செய்தியாளர்களினால் காண முடிந்தது.

ஸ்ரீவத்ஸவ கப்பலில் வந்துதிரும்பிய யு.என்.ஐ செ தியாளர் தாம் காங்கேசன்துறையில் கண்டவற்றை மேற்கண்டவாறு விவரிக்கிறார்.

யு.என்.ஐ செய்தியாளர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹாபர்வியூ முகாமில் பெரும் எண்ணிக்கையான தமிழர்களை செய்தியாளர்கள் சந்தித்தனர்.

குடாநாட்டில் நடந்த இராணுவ, விமானத் தாக்குதல்களில் அப்பாவி மக்கள் உயிரிழந்தது பற்றி அவர்கள் செய்தியாளரிடம் புள்ளி விவரங்களுடன் தெரிவித்தனர்.

இந்த உரையாடல் இராணுவத்தினருக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

—இப்படி யு.என்.ஐ. செய்தியாளர் தெரிவித்தார். (உ-ள)

### இந்திய நிவாரணக் கப்பலின்

## வானொலித்தொடர்பை குழப்பிய அதிகாரிகள்

சென்னை, ஜூலை 1

இந்திய நிவாரணக் கப்பலில் வந்த இந்திய அதிகாரிகள் புதுடில்லி அமைச்சரவைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாதபடி வானொலித் தொடர்புகள் குழப்பப்பட்டன.

ஈழத் தமிழர்களுடன் இந்தியச் செய்தியாளர்கள் உரையாடியதைக் கண்ட பின்னரே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வானொலி அலைத் தொடர்பை குழப்பியடித்தனர்.

—இப்படி உணவுக் கப்பலில் காங்கேசன்துறை வந்து திரும்பிய யு. என். ஐ. செய்தியாளர் தெரிவித்தார்.

இச்செய்தியை 'இந்தியப் பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன.

துறைமுக அதிகாரிகள் தவருன தகவல்களைக் கொடுத்ததனல் ஸ்ரீவத்சவ கப்பலின் "புரொப் பெல்லர்" பழுதடைந்தது.

துறைமுகத்தின் ஆழம் 12 அடியாக இருக்க துறைமுக அதிகாரிகள் 15 அடி என்று தெரிவித்தனராம்.

ஸ்ரீவத்சவ கப்பலோ 14.6 அடி ஆழத்தில் தான் நங்கூரமிடக்கூடிய தான கப்பல்.

இத்தவருன தகவலால் பழுதடைந்த புரொப் பெல்லருடன் காங்கேசன்துறையில் இருந்து சென்னை திரும்ப கப்பலுக்கு 26 மணித்தியாலங்கள் எடுத்தன.

ஆனல் இக்கப்பல் சென்னையில் இருந்து காங்கேசன்துறை போய்ச் சேர 18 மணித்தியாலங்களே எடுத்திருந்தது.

—இப்படி 'இந்து' செய்தி தெரிவித்தது. (உ-எ)

## சிக்கலானது என்கிறார் மூப்பனார்

சென்னை, ஜூலை 1

ஸ்ரீலங்காப் பிரச்சினை சிக்கலானது. மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.

மதுரையில் வைத்து செய்தியாளரிடம் இத்தகவலை வெளியிட்டார் இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கருப்பையா மூப்பனார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய மத்திய அரசு தன்னலான முயற்சிகளை எடுத்து வருகிறது என்றும் திரு. மூப்பனார் தெரிவித்தார். (உ-எ)

## ரஷ்யாவில் அரசியல் சீர்திருத்தங்கள்

மாஸ்கோ, ஜூலை 1

பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள சோவியத் உயர் கவுன்ஸில் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக தலைவர் திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் சமர்ப்பித்த திட்டத்தை உயர் கவுன்ஸில் ஏற்றுக் கொண்டது.


வரையறுக்கப்பட்ட முறையில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது, அரசு அதிகாரிகளின் துஷ்பிரயோகங்களினல் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெற நீதிமன்றம் செல்லும் உரிமையை மக்களுக்கு வழங்குவது— ஆகிய சீர்திருத்தங்கள் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன. (இ-எ)

## வித்தாரம்---

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுச் செய்தி நிறுவனங்களுக்குப் பேட்டி குடுக்கினம்.

உந்தப் பேட்டியளை பாக்கையிக்கை ஜெனரல்மாரே அரசியல் வாதியளை விழுத்திப் போட்டு ஆட்சியைப் பிடிப்பினமோ எண்டு ஒரு சந்தேகம் வருகுது! ஆட்சித் தலைவர்மாரெல்லாம் அடியிலை தாழுமளவுக்கும், தங்களை ஆகாயத்திலை தூக்கி வைக்கும் அளவுக்கும் எல்லே பேட்டியள் போகுது!!



## ஷெயில்சிங் எச்சரிக்கை

கல்கத்தா, ஜூலை 1

உள்விவகாரத்தில் தலையிட்டு இந்தியாவைப் பலவீனப்படுத்தும் வெளிச்சக்திகள் குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஜனதிபதி கியானி ஷெயில்சிங் இப்படி எச்சரிக்கை செய்தார்.

கல்கத்தா நேதாஜி ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் ஜனதிபதி இதனைத் தெரிவித்தார்.

## விஜே சென்னை செல்கிறார்

தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்த மீண்டும் சென்னை செல்ல இருக்கிறார் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அமைப்பாளர் திரு. விஜேகுமாரணதுங்க.

சில தினங்களில் இப்பயணத்தை மேற்கொள்ள இருப்பதாக திரு. குமாரணதுங்க கொழும்புச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

டிசம்பர் 19 யோசனை ஓரளவு நியாயமான யோசனை. அதன் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதே எனது நோக்கம் — இப்படி அவர் மேலும் சொன்னார். (இ-எ)

## தீப்பற்றிய கப்பல் காப்பாற்றப்பட்டது

பாரிஸ், ஜூலை 1

அத்திலாந்திக் கடலில் வெடிமருந்துப் பொருள்களுடன் சென்று கொண்டிருந்த சமயம் தீப்பிடித்துக்கொண்ட இந்தியக் கப்பல் முற்றாகத் தீப்பிடிக்காமல் காப்பாற்றப்பட்டது.

'இன்டியன் கிறேஸ்' என்ற கப்பலே தீப்பிடித்துக் கொண்டது,

பிரான்ஸுக்கு அருகில் சென்று கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் இடம் பெற்றது.

## பயங்கரவாத சட்டத்தின் கீழ் முஸ்லிமுக்கு சிறை

கொழும்பு, ஜூலை 2

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மூதூர், தோப்பூர் கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம் வாலிபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜீ.எல்.எம்.டி. சில்வா ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

தமிழ்த்தீவிரவாதிகள் பற்றி தகவல் கொடுக்கத் தவறியது என்ற குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்தே மொகமட் இஸ்மாயில் காசிம்லெப்பை என்ற இந்த வாலிபருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது. (இ-எ)

## நிவாரணப் பொருள்கள் விநியோகம்

பாதிப்புற்றோருக்கான ஸ்ரீ லங்கா அரசின் நிவாரணப் பொருள்கள், யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கிளைகள் ஊடாக நேற்று விநியோகிக்கப்பட்டன. (உ)

## இன்று தேர்

திருநெல்வேலி, ஜூலை 2

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த தேர் உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும். (இ-143)

### அமிர் கேட்கிறார்

## 4 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் இடைத்தேர்தல்களா?

சென்னை, ஜூலை 1

சுமார் 4 லட்சம் தமிழர் சொந்த இடங்களில் இருந்து துரத்தப்பட்ட நிலையில் வடக்கு, கிழக்கில் இடைத்தேர்தல்களை நடத்த ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்து உள்ளது ஜனநாயகத்தைப் பரிகசிப்பதாகும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இரண்டு மாகாணங்களிலும் நிலைமை வழமைக்குத் திரும்பி விட்டது என்பதைக் காட்டவே கொழும்பு அரசு இடைத் தேர்தல்களை நடத்த உள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக தமிழ் வாக்காளர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து விட்டனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்வரை தமிழ்ப் பகுதிகளில் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இப்படி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார் என்று 'இந்து' செய்தி வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

### 1985க்கு முன் ஓய்வுபெற்றோருக்கு

## 6 மாத பாக்கியுடன் அதிகரித்த ஓய்வூதியம்

### அடுத்த மாதமே இங்கு கிடைக்கும்

கொழும்பு, ஜூலை 2

1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற சுமார் ஒரு லட்சம் அரச ஊழியருக்கு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் ஆறு மாதபாக்கியுடன் வழங்கப்பட உள்ளது.

கொழும்பில் உள்ள சுமார் ஐம்பதினயிரம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம்மாதம் பாக்கிப் பணத்துடன் ஓய்வூதியம் வழங்கப்படும்.

வெளிமாவட்டங்களில் வாழும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஜனவரி மாதம் முதல் கிடைக்க வேண்டிய பாக்கிப்பணம் அடுத்தமாத ஓய்வூதியத்துடனே தான் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை ஓய்வூதியத்தைப் பொறுத்து அதிகரிப்பு 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை இருக்கும் என்று ஓய்வூதியத் திணைக்கள இயக்குநர் திரு. எஸ். சிவானந்தன் தெரிவித்தார். (உ-எ)

### செஞ்சிலுவைப் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் குறித்து

## ஹமீதிற்கு விளக்கம் அளித்தார் டிக்ஸிற்

கொழும்பு, ஜூலை 2

உணவுப் பொருள்கள் விநியோகத்தின் போது இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், தூதரக அதிகாரிகள், யாழ் பிரசைகள் குழு, மற்றும் அமைப்புக்களைச் சந்திப்பதும் பேச்சுக்கள் நடத்துவதும் தவிர்க்க முடியாத விஷயம்.

- இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என் டிக்ஸிற் வெளிவிவகார அமைச்சர் ஜனப்.சாகுல் ஹமீத்திடம் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டில் இடிந்த கோயில்கள், சேதமடைந்த வீடுகளை இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், இந்தியத் தூதரக அதிகாரிகள் பார்வையிட்டனர். மக்களிடம் இருந்து மகஜர்களைப் பெற்றுக் கொண்டனர்.

- இப்படி உள்ளூர்ப் பத்திரிகைகள் சில வெளியிட்ட செய்திகளை கொழும்பு வெளியுறவு அமைச்சு இந்தியத் தூதரின் கவனத்துக்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்தே, இந்தியத் தூதர் இப்படி தெரிவித்தார் என்று இலங்கை வானொலி நேற்று இரவு அறிவித்தது.

யாழ் மக்களுக்கு உணவு விநியோகம் செய்வது தொடர்பான உடன்படிக்கையை இந்திய அரசோ, இந்திய செஞ்சிலுவைச் சங்கமோ மீறுது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த [illegible] பார்வையிடவில்லை. [illegible] உரிமை மீறல் சம்பவங்கள் பற்றிய விவரங்களை அவர்கள் சேகரித்தனர் என்பது தவறு.

இந்தியத் தூதரக அதிகாரிகள் தான் யாழ் மக்களிடமிருந்து மகஜர்களைப் பெற்றுக் கொண்டனர்-

கொழும்பிலும் கண்டியிலும் ஏனைய இடங்களிலும் மக்களிடமிருந்து மகஜர்களைப் பெற்றுக் கொண்டதுபோல, யாழ் மக்களிடம் இருந்தும் மகஜர்களைஇந்தியத் தூதரக அதிகாரிகள் பெற்றுக்கொண்டனர்.

—இப்படி இந்தியத் தூதரகம் அறிவித்து இருப்பதாக கொழும்பு வானொலி அறிவித்தது. (உ-எ)

## பொடி புத்தா வடக்கில் போட்டியாம்

கொழும்பு, ஜூலை 2

ஊர்காவற்றுறை நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடப் போவதாக நிக்கவரட்டியாவின் முன்னாள் எம். பி முதியான்ஸே தென்னக்கூன் அறிவித்திருக்கின்றார்.

பொடிபுத்தா என்று செல்லமாக அழைக்கப் படுபவர் இவர்.

தமது முடிவு குறித்து இவர் ஜனதிபதிக்கு கடிதம் எழுதி உள்ளார்.

'நாகதீபா, ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ளது. அதனால் தான் [illegible] என்று திரு. தென்னக்கூன் சொன்னார். (இ-எ)

## இன்று சந்திப்பு

கொழும்பில் உள்ள வடக்கு, கிழக்கு தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடருவது பற்றி கொழும்பு பிரசைகள் குழு இன்று வியாழன் கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்த உள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக தமிழ் மாணவர்கள் பலர் வடக்கு, கிழக்கில் இருந்து வெளியேறி கொழும்பில் தங்கி உள்ளனர்.

## திலகரத்தின இன்று கொழும்பு வருகிறார்

புதுடில்லியில் உள்ள ஸ்ரீலங்காத் தூதர் பெர்னட் திலகரத்தின இன்று வியாழன் கொழும்பு வருகின்றார்.

அரசுத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவே திரு. திலகரத்தின கொழும்பு திரும்புவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதுடில்லி சென்று இருந்த இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் செவ்வாய் கொழும்பு திரும்பினர்.

இதலைடையில் இனப் பிரச்சினைக்குப் பொறுப்பாகஉள்ள இணைஅமைச்சர் நட்வர்சிங் நான்கு நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு முதலில் லாவோஸ்சென்றிருக்கின்றார்.

கம்பூச்சியா, தாய்லாந்து,வியட்நாம் ஆகிய நாடுகளுக்கும் திரு. நட்வர்சிங் விஜயம் செய்வார். (இ-எ)

## காணமற்------

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்கள் தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர்கள் தாம் திரட்டிய விவரங்களை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பி வைப்பார்கள்.

அதன் பின்னர் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தினர் அரச உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு காணமற் போனேர் பற்றிய தற்போதைய நிலை விபரங்களை உடன் அறிந்து உறவினர்களுக்குத் தெரிவிப்பர்.

— இவ்வாறு யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார். (உ-ள)

## வீடுகளைப்----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

காமம் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தமது வீடுகளைப் பார்வையிட்டு அத்தியாவசியப்பொருள்களை எடுக்க நேற்றும் நேற்றுமுன்தினமும் இராணுவம் அனுமதியளித்தது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது வீடுகளுக்குச் சென்று பார்த்தபோதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கீரிமலை வீதியிலும், மாவிட்டபுரம் பிரதான வீதியிலும், மாவிட்டபுரம்பகுதிகளிலும் பல வீடுகள் தரைமட்டமாகி இருந்தன.

இதற்கிடையில் மாவைக்கந்தனின் உற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்தபோதும் உற்சவம் நிறுத்தப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் சென்ற பொதுமக்கள் மாவைக் கந்தனைத் தரிசித்துவந்தனர். (இ-68)

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

## குடாநாட்டில் எவரும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 2

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கானநியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் காலக்கெடு நாளை நண்பகல் 12 மணியுடன் முடிவடைகின்றது.

ஆனல் யாழ் குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு இன்று வரை எவரும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை.

யாழ் மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச சபைகள், மூன்று நகர சபைகள், ஒரு மாநகர சபை ஆகியவற்றிற்கான தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் அறிவிப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

நாளைய காலக்கெடு முடிவுறும்போது நியமனப்பத்திரங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாவிட்டால் ஒருவாரத்தின் பின் மீண்டும் நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்கான ஒரு தவணையை அரச அதிபர் அறிவிப்பார்.

அந்தத் தவணையிலும் எவரும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யாவிடில் தொடர்ந்து நான்கு வருடங்களுக்குத் தேர்தல் நடைபெருது என தேர்தல் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ள)

## வடக்கு - கிழக்கு தேர்தல்களில் முஸ்லிம்கள் கலந்துகொள்ளக் கூடாது

### முஸ்லிம் முன்னணி கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 2

வடக்கு,கிழக்கில் நடைபெறவுள்ள தேர்தல்கள் எதிலும் முஸ்லிம் மக்கள் கலந்து கொள்ளக் கூடாது. அதன் மூலமே அபாயகரமான சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

இப்படி இஸ்லாமிய அரசியல் நடவடிக்கை முன்னணி தெரிவித்து உள்ளது.

சிலர் தமிழ்ப் பேரினவாதம் பற்றி முஸ்லிம்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

அதே நபர்கள் இப்போது தமிழர்களின் அபிலாஷைகளைப் புறக்கணித்துவிட்டு பிரதேச சபை மற்றும் தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கோருவது புதுமையாக உள்ளது.

தமிழ், முஸ்லிம் உறவைக் குலைக்கும் எக்காரியத்திலும் ஈடுபடக் கூடாது என்று முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது —

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஷெல்லினல் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பொழுது யாழ் ஞானம்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்த இந்திய, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

நேற்று மாலை திடீர் திடீர் என ஐந்து ஷெல் குண்டுகள் அடுத்தடுத்து நகர்ப் பகுதியில் விழுந்து வெடித்தன.

இடையிடையே துப்பாக்கி வேட்டுகளும் கோட்டை முகாமில் இருந்து தீர்க்கப்பட்டன.

## 3ஆவது------

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தியாவின்நிலை என்ன என்று பத்திரிகையாளர்கள் திரு. குப்தாவிடம் கேட்டார்கள்.

அதற்கு அவர் தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினையை இந்தியாவும் இலங்கையும் சேர்ந்துதான் தீர்க்கவேண்டும். இப்பிரச்சினை தற்பொழுது ஒரு சிக்கலான நிலையில் உள்ளது. எனினும் அதனைத்தீர்க்க இந்தியா தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் ஸ்ரீலங்கா இராணுவம் குடாநாட்டில் அலலது வேறு தமிழ்ப் பகுதியில் "ஒப்பறேஷன் லிபறேஷன்" மூன்ருவது கட்டத் தாக்குதலை நடத்த மாட்டாது என்றே நாம் நம்புகிறோம்.

ஆகையால் தமிழ் மக்கள் இராணுவ நடவடிக்கைகள் குறித்துப் பீதி கொள்ள வேண்டியது இல்லை.

இரண்டு அரசாங்கங்களும் சேர்ந்து வெகு விரைவில் தமிழ் மக்கள் அமைதியுடன் வாழக் கூடிய ஒரு தீர்வைக் காணவேண்டும் என்றே இந்தியா முயன்று வருகிறது.

நாங்கள் இங்கு வந்த பின்னர் பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கை எதுவும் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறவில்லை — என்றார். (அ-10)

## ஈழத்தமிழ்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் —

★ பாடசாலை நேரத்தில் இராணுவத் தாக்குதல்கள் நடத்தக் கூடாது —

★ அதிபர்களின் அனுமதியின்றி மாணவர்களை எக்காரணம் கொண்டும் கைது செய்யக்கூடாது—

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

காலை 11 மணியளவில் யாழ் பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பமான ஊர்வலம் பலாலி வீதி, அரசடி வீதி, பருத்தித்துறை வீதி வழியாக யாழ் கல்வித் திணைக்களத்தை அடைந்தது.

மிக நீண்ட இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சுலோகங்களை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பியபடி சென்றனர்.

ஊர்வலத்தின் இறுதியில் யாழ் கல்வித் திணைக்கள முன்றலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல மாணவப் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

மாணவர் முன்னணி சார்பிலும், 25 பாடசாலைகள் சார்பிலும் 26 மகஜர்கள் கல்வித் திணைக்கள பிரதம அதிகாரி திரு. கே. கந்தசாமியிடம் கையளிக்கப்பட்டது. (உ-ள)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 02-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Thursday July 02, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org